1981 ஏப்ரல் 29] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சொல்கிறீர்களே, ஆனால் இங்கே இந்த மாதிரி போடவில்லையே என்று சொன்னால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, இந்த மனுக்களைக் கொடுத்து இவ்வளவு காலம் ஆகிவிட்டது என்று என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன் மேல் தக்க நடவடிக்கை எடுத்து, இனிமேல் அதைப் போல நடைபெறாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும்.

திரு. கு. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, தாசில்தார் அவர்கள் தான் இந்த மனுக்களில் உத்தரவிடவேண்டும் என்று இருக்கின்றது. பல சமயங்களில், பல தாலுக்கா அலுவலகங்களில் இந்த தாசில்தார்கள் இருப்பதில்லை. எனவே இதற்கு வேறு ஏதாவது அலுவலர்கள் இருந்தால் இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியும். அப்படி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை. குறிப்பிட்ட இடங்களிலே சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அதற்குரிய காரணங்களை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

வறட்சிப் பகுதிகளில் குத்தகைத் தொகையை ரத்து செய்தல்.

*வினா எண். 930—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் (குத்தகை) விவசாயிகளுக்கு இந்த பசலி குத்தகை முழுவதையும் ரத்து செய்ய அரசு உத்திரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டு குத்தகை விவசாயிகள் தங்களுடைய கைப் பொருள்களை எல்லாம் போட்டு, விவசாயம் செய்து அது முழுவதும் சாவியாகப் போயிருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் குத்தகை வேறு கட்ட முடியுமா ? வறட்சி என்று இன்றைக்கு அறிவித்து இருக்கிறீர்கள், அப்படி வறட்சி என்று அறிவித்து அந்தப் பகுதிகளிலே உடனடியாக காலதாமதம் இல்லாமல் குத்தகைப் பகுதியை ரத்து செய்ய வேண்டும் என்பதை அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 75-25 என்பது அந்த விளைச்சல்தான் கொடுக்க

வேண்டும். 75 குத்தகைதாரர்களுக்கும் 25 நிலச் சொந்தக்காரர்களுக்கும் அந்த விளைச்சலில்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே அதிலே விளையலே இல்லை என்று சொன்னால், கொடுக்க வேண்டிய தேவை இல்லாமல் இருக்கிறது. இதிலே என்ன சங்கடம் என்று தெரியவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, 75:25 விளைந்தால்தான் குத்தகை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குப் பல இடங்களில் தானியத்திற்குப் பதிலாக பணக் குத்தகைக்கு சாகுபடி செய்கிறார்கள். குறிப்பாக தேவஸ்தான நிலங்களில் பணக் குத்தகைக்கு சாகுபடி செய்கிறார்கள். இம்மாதிரி இருப்பதால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள் மேல் கோர்ட்டிலே போட்டு அதை வசூலிப்பதற்கும், நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே பணக்குத்தகை செய்பவர்களுக்காவது விதி விலக்கு அளிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் 1956 ஆம் ஆண்டு வந்தது. 1956 ஆம் ஆண்டு வருகிறபோது கூட, அப்படி எல்லாம் வறட்சி என்று தெரிந்துகூட அந்தச் சட்டத்திலே ஒரு பிரிவு இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படி எங்காவது ஏற்பட்டால் விளைச்சலே இல்லை என்று சொன்னால் உடனடியாக வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக விதிவிலக்கு பெறுவதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இருக்கின்றது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வறட்சிக்கு இலக்கான பகுதி என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட பகுதி எவை எவை. அவைகளில் விளையாத பகுதிகளில் வரிவஜா செய்வதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி குத்தகையை ரத்து செய்வதைப் பற்றியது.

மேல்நிலைப்பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர்களை நியமித்தல்.

*வினா எண் 836—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடற்கல்வி இயக்குநர்கள் இல்லாத எல்லா மேல்நிலைப்பள்ளிகட்கும் உடனடியாக உடற்கல்வி இயக்குநர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?